தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்

N.S.K
தங்கமாளிகை
தங்கம் மற்றும் வெள்ளி பொருட்களுக்கு
செய்கூலி, சேதாரம் இல்லை
96557 79285
98429 78833

| Vol: 02 | Issue: 169 | 4 Pages | 16.1.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 169 | 4 பக்கங்கள் | 16.1.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று

விளக்கம்: பலச் சுடர்களை உடைய பெரு நெருப்பில் தோய்வது போன்ற துன்பத்தை ஒருவன் செய்த போதிலும் கூடுமானால் அவன்மேல்சினங்கொள்ளாதிருத்தல்நல்லது.

## ஊழல் வழக்கில் வங்காளதேச முன்னாள் பிரதமர் கலிதா ஜியா விடுதலை



டாக்கா,ஜன.16


வங்காளதேசத்தில் 19911996 மற்றும் 2001 2006 காலகட்டத்தில் பிரதமராக பதவி வகித்தவர் கலிதா ஜியா (வயது 79). இவர் தனது ஆட்சிக்காலத்தில் ஜியா ஆதரவற்றோர் அறக்கட்டளையின் பெயரில் அரசாங்க நிதியைமோசடிசெய்ததாககுற்றம்சாட்டப்பட்டுவழக்குதொடரப்பட்டது. இந்த வழக்கில் கலிதா ஜியா, அவரது மகன் தாரிக் ரஹ்மான் உள்ளிட்ட 6 பேர் மீது குற்றம்சாட்டப்பட்டது. வழக்கை விசாரித்த சிறப்பு நீதிமன்றம், கலிதா ஜியாவுக்கு 5 ஆண்டு சிறை தண்டனையும், மற்றவர்களுக்கு 10 ஆண்டு கடுங்காவல் தண்டனையும் விதித்தது.

இந்த தீர்ப்பை எதிர்த்து கலிதா ஜியா உள்ளிட்ட 6 பேரும் ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்தனர். ஆனால், மேல்முறையீட்டு மனுவை விசாரித்த ஐகோர்ட்டு, கலிதாஜியாவுக்கானதண்டனையை இரட்டிப்பாக அதிகரித்து (10 ஆண்டுகள் சிறை) உத்தரவிட்டது.

இதையடுத்து சுப்ரீம் கோர்ட்டில் கலிதா ஜியா அப்பீல் செய்தார். இவ்வழக்கின் விசாரணை நிறைவடைந்த நிலையில், ஐகோர்ட்டின் முந்தைய உத்தரவான 10 ஆண்டு சிறைத்தண்டனையை சுப்ரீம் கோர்ட்டு ரத்து செய்து இன்று உத்தரவிட்டது. அத்துடன் பழிவாங்கும் நோக்கில் வழக்கு தொடரப்பட்டது நிரூபணமாகியிருப்பதாக கூறி கலிதா ஜியா உள்ளிட்ட 6 பேரையும் விடுதலை செய்து உத்தரவிட்டது.

கலிதா ஜியாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் மருத்துவ சிகிச்சைக்காக இந்த மாத தொடக்கத்தில் லண்டனுக்குச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 3,600 ஊழியர்களை பணி நீக்கம் செய்ய மெட்டா நிறுவனம் திட்டம்




வாஷிங்டன், ஜன.16

ஏ.ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவு மீது உலகின் முன்னணி நிறுவனங்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன. இந்த நிலையில், பேஸ்புக், இன்ஸ்டாகிராம், வாட்ஸ்அப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களை நடத்தும் மெட்டா நிறுவனர் மார்க் ஜுக்கர்பெர்க் தமது நிறுவனத்தில் பணியாற்றும் 3,600 ஊழியர்களை பணி நீக்கம் செய்ய முடிவெடுத்துள்ளார்.மேலும் அவர்களுக்கு பதில் புதிய ஊழியர்களை பணியமர்த்த திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், நிறுவனத்தின் கொள்கைகளை சீரமைக்கும் ஒரு பணியாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பணிதிறன் மற்றும் எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் பணிபுரியாத 5 சதவீதம் ஊழியர்களை வேலை நீக்கம் செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான போதிய இழப்பீடும் அளிக்கப்படும். ஒரு வருடத்தில் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யாதவர்களை நாங்கள் பொதுவாக நிர்வகிக்கிறோம். 5 சதவீதம் என்பது தற்போது நிறுவனத்தில் உள்ள 72,000 பேரில் 3,600 ஊழியர்கள் ஆகும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## ரஷியா அதிரடி தாக்குதல்.. உக்ரைனில் முன்னெச்சரிக்கையாக மின்சாரம் துண்டிப்பு



கீவ், ஜன.16

உக்ரைன் மீது முழு அளவிலான படையெடுப்பை தொடங்கிய ரஷியா கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாக தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு உக்ரைனும் பதிலடி கொடுத்து வருகிறது. சமீபகாலமாக உக்ரைனின் உள்கட்டமைப்புகளை ரஷியா தாக்குகிறது.

அவ்வகையில், ரஷிய படைகள் இன்று உக்ரைனின் மின் உற்பத்தி மையங்கள் மற்றும் எரிசக்தி சேமிப்பு மையங்களை குறிவைத்து மிகப்பெரிய அளவில் ஏவுகணை தாக்குதலை தொடங்கியது. இதனால் பல இடங்களில் முன்னெச்சரிக்கையாக மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை உக்ரைன் எரிசக்தி துறை மந்திரி ஹெர்மன் ஹலுசென்கோ தெரிவித்துள்ளார். உக்ரைன் மக்களை எதிரி (ரிஷியா) தொடர்ந்து பயமுறுத்துவதாகவும் அவர் கூறி உள்ளார். மக்கள் பாதுகாப்பாக , அந்தந்த பகுதிகளில் உள்ள தங்குமிடங்களில் தங்கியிருக்க வேண்டும் என்றும், அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ அப்டேட்களை அறிந்து அதனை பின்பற்றவேண்டும் என்றும் மந்திரி கேட்டுக்கொண்டுள்ளார். கார்கிவ், சுமி, போல்டாவா, சபோரிஜியா, டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் மற்றும் கிரோவோஹ்ராட் ஆகிய பகுதிகளில், அரசு மின் நிறுவனமான உக்ரெனெர்கோ அவசரகால மின்வெட்டை அமல்படுத்தி உள்ளது. ரஷியாவால் ஏவப்பட்ட பல ஏவுகணைகளை உக்ரைனின் விமானப்படை கண்டறிந்து, மக்களுக்கு உரிய பாதுகாப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். தாக்குதலில் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக தகவல் எதுவும் வெளியாகவில்லை.

# 37 மாவட்டங்களில் 746 சாலைகள் அமைக்க முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு



சென்னை, ஜன.16

தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஊரக மக்களுக்கு நேரடி தொடர்பு வசதியினை வழங்குவதில் சாலைகள் முக்கிய பங்கு வகிக்கிறது. போக்குவரத்தில் ஊரகச் சாலைகள் கடைசி இணைப்பாக கருதப்பட்டாலும், ஊரக பகுதி மக்களுக்கு போக்குவரத்து வசதியினை வழங்குவதில் மிக முக்கிய இணைப்பாக ஊரகச் சாலைகள் செயல்படுகின்றன. தமிழ்நாடு, சுமார் 1 லட்சத்து 37 ஆயிரம் கிலோ மீட்டர் நீளம் கொண்ட பரந்த சாலைத் தொகுப்பினை கொண்டுள்ளது. ஊரகச் சாலைத் தொகுப்பினை மேம்படுத்தி அதன் மூலம், மாநிலத்தில் உள்ள தொலைதூரப் பகுதிகளுக்கும் சாலை வசதியினை உறுதிப்படுத்தும் தொலைநோக்குப் பார்வையினை இந்த அரசு கொண்டுள்ளது.

இதனை உறுதி செய்யும் வகையில், ஊரகச் சாலைகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்த இந்த அரசு, நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ் 2024 25ம் ஆண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 37 மாவட்டங்களில் 1,452.97 கி.மீ நீளமுள்ள 746 சாலைகள் அமைக்க ரூ.804.59 கோடி மற்றும் அச்சாலைகளின் 5 ஆண்டு கால தொடர் பராமரிப்பு ரூ.58 கோடி மதிப்பீட்டில் அமைக்க தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அரசாணையின்படி:

தர்மபுரி மாவட்டத்தில் ரூ. 24.49 கோடி மதிப்பீட்டில், 36.94 கி.மீ நீளமுள்ள 19 சாலைகள்,

மதுரை மாவட்டத்தில் ரூ. 37.30 கோடி மதிப்பீட்டில், 57.58 கி.மீ நீளமுள்ள 30 சாலைகள்,

நாமக்கல் மாவட்டத்தில் ரூ. 25.78 கோடி மதிப்பீட்டில், 44.11 கி.மீ நீளமுள்ள 24 சாலைகள்,

சிவகங்கை மாவட்டத்தில் ரூ. 35.30 கோடி மதிப்பீட்டில், 58.22 கி.மீ நீளமுள்ள 26 சாலைகள்,

கடலூர் மாவட்டத்தில் ரூ. 55.20 கோடி மதிப்பீட்டில், 86.96 கி.மீ நீளமுள்ள 39 சாலைகள்,

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ரூ. 50.72 கோடி மதிப்பீட்டில், 91.88 கி.மீ நீளமுள்ள 39 சாலைகள்,

கரூர் மாவட்டத்தில் ரூ. 41.26 கோடி மதிப்பீட்டில், 92.54 கி.மீ நீளமுள்ள 46 சாலைகள்,

செங்கல்பட்டு மாவட்டத்தில் ரூ. 10.96 கோடி மதிப்பீட்டில், 11.42 கி.மீ நீளமுள்ள 7 சாலைகள்,

திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ. 60.08 கோடி மதிப்பீட்டில், 73.08 கி.மீ நீளமுள்ள 38 சாலைகள்,

விருதுநகர் மாவட்டத்தில் ரூ. 40.03 கோடி மதிப்பீட்டில், 74.39 கி.மீ நீளமுள்ள 39 சாலைகள்,

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரூ. 12.29 கோடி மதிப்பீட்டில், 19.03 கி.மீ நீளமுள்ள 10 சாலைகள்,

நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ. 9.77 கோடி மதிப்பீட்டில், 18.41 கி.மீ நீளமுள்ள 11 சாலைகள்,

தென்காசி மாவட்டத்தில் ரூ. 15.58 கோடி மதிப்பீட்டில், 32 கி.மீ நீளமுள்ள 14 சாலைகள்,

தேனி மாவட்டத்தில் ரூ. 10.44 கோடி மதிப்பீட்டில், 20.20 கி.மீ நீளமுள்ள 12 சாலைகள்,

திருப்பத்தூர் மாவட்டத்தில் ரூ. 14.83 கோடி மதிப்பீட்டில், 29.57 கி.மீ நீளமுள்ள 17 சாலைகள்,

திருப்பூர் மாவட்டத்தில் ரூ. 31.05 கோடி மதிப்பீட்டில், 60.20 கி.மீ நீளமுள்ள 33 சாலைகள்,

அரியலூர் மாவட்டத்தில் ரூ.23.45 கோடி மதிப்பீட்டில், 34.01 கி.மீ நீளமுள்ள 15 சாலைகள்,

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.6.11 கோடி மதிப்பீட்டில், 12.93 கி.மீ நீளமுள்ள 9 சாலைகள்,

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ.22.33 கோடி மதிப்பீட்டில், 39.54 கி.மீ நீளமுள்ள 23 சாலைகள்,

மயிலாடுதுறை மாவட்டத்தில் ரூ.15.44 கோடி மதிப்பீட்டில், 27.55 கி.மீ நீளமுள்ள 15 சாலைகள்,

ராணிப்பேட்டை மாவட்டத்தில் ரூ.7.76 கோடி மதிப்பீட்டில், 16.63 கி.மீ நீளமுள்ள 7 சாலைகள்,

சேலம் மாவட்டத்தில் ரூ.32.10 கோடி மதிப்பீட்டில், 47.07 கி.மீ நீளமுள்ள 26 சாலைகள்,

பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.11.14 கோடி மதிப்பீட்டில், 19.30 கி.மீ நீளமுள்ள 11 சாலைகள்,

தஞ்சாவூர்மாவட்டத்தில்ரூ.20.05 கோடி மதிப்பீட்டில், 42.16 கி.மீ நீளமுள்ள 23 சாலைகள்,

தூத்துக்குடி மாவட்டத்தில் ரூ.12.08 கோடி மதிப்பீட்டில், 24.66 கி.மீ நீளமுள்ள 8 சாலைகள்,

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரூ.21.83 கோடி மதிப்பீட்டில், 38.79 கி.மீ நீளமுள்ள 23 சாலைகள்,

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ரூ.25.96 கோடி மதிப்பீட்டில், 41.66 கி.மீ நீளமுள்ள 20 சாலைகள்,

ஈரோடு மாவட்டத்தில் ரூ.17 கோடி மதிப்பீட்டில், 29.95 கி.மீ நீளமுள்ள 17 சாலைகள்,

வேலூர் மாவட்டத்தில் ரூ.22.77 கோடி மதிப்பீட்டில், 31.37 கி.மீ நீளமுள்ள 13 சாலைகள்,

திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.11.46 கோடி மதிப்பீட்டில், 21.27 கி.மீ நீளமுள்ள 11 சாலைகள்,

திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.33.10 கோடி மதிப்பீட்டில், 40.36 கி.மீ நீளமுள்ள 21 சாலைகள்,

ராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.17.10 கோடி மதிப்பீட்டில், 23.93 கி.மீ நீளமுள்ள 8 சாலைகள்,

விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.10.44 கோடி மதிப்பீட்டில், 20.57 கி.மீ நீளமுள்ள 14 சாலைகள்,

திருவாரூர் மாவட்டத்தில் ரூ.16.81 கோடி மதிப்பீட்டில், 36.98 கி.மீ நீளமுள்ள 24 சாலைகள்,

புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.26.22 கோடி மதிப்பீட்டில், 54.43 கி.மீ நீளமுள்ள 31 சாலைகள்,

நீலகிரி மாவட்டத்தில் ரூ.13.40 கோடி மதிப்பீட்டில், 14.50 கி.மீ நீளமுள்ள 7 சாலைகள்,

திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூ.20.94 கோடி மதிப்பீட்டில், 28.76 கி.மீ நீளமுள்ள 16 சாலைகள், என மொத்தம் 37 மாவட்டங்களில் 1,452.97 கி.மீ நீளமுள்ள 746 சாலைகள் அமைக்க ரூ.804.59 கோடி மற்றும் அச்சாலைகளின் 5 ஆண்டு கால தொடர் பராமரிப்பு ரூ.58 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார். இதற்குரிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

சாலைகள் அமைப்பதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு சமத்துவமும், ஜனநாயகமும் காக்கும் வாடிவாசல் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்



சென்னை, ஜன.16

தமிழ்நாடு முழுவதும் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை இன்று உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதிகாலை முதலே புத்தாடை உடுத்தி, புதுப்பானையில் பச்சரிசி பொங்கலிட்டு தை மகளை தமிழர்கள் வரவேற்று வருகின்றனர். இந்த நிலையில், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாடு துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் தெரிவித்திருப்பதாவது: உலகெங்கும் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் நம் பண்பாட்டுத் திருவிழாவான பொங்கல் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். சாதி, மதம் கடந்து அனைவராலும் கொண்டாடப்படுகிற இச்சமத்துவப் பெருவிழாவை போற்றுவோம். முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் திட்டங்களால் உயர்ந்து நிற்கும் தமிழ்நாடு,

இந்திய ஒன்றியத்தில் சமத்துவமும் ஜனநாயகமும் காக்கும் வாடிவாசல் என்பதை உலகுக்கு உரக்கச் சொல்வோம். நம் பெருமைமிகு தமிழ்நாட்டின் வளர்ச்சியை அடுத்தக் கட்டத்துக்கு எடுத்துச்செல்ல 2026ல் 200க்கும் அதிகமான இடங்களில் கழக அணி வெல்ல தமிழர் திருநாளில் உறுதியேற்போம்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## தமிழக உள்துறை செயலாளருக்கு ராமநாதபுரம் ஆர்.எஸ்.மங்கலம் இன்ஸ்பெக்டர் சரவணன் பரபரப்பு கடிதம்



ராமநாதபுரம், ஜன.16

ராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ். மங்கலம் போலீஸ் இன்ஸ்பெக்டர் சரவணன் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில் திருவாடானை துணை போலீஸ் சூப்பிரண்டு அலுவலக எழுத்தர், ஆர்.எஸ்.மங்கலம் போலீஸ் நிலையத்தில் பணிபுரியும் காவல் அதிகாரிகள் நிலைய பொறுப்பு அதிகாரியான என்னிடம் கேட்காமல் தன்னிச்சையாக செயல்பட்டு நிர்வாக சீர்குலைவை ஏற்படுத்தி வருவதால், ஆர்.எஸ்.மங்கலம் போலீஸ் நிலையத்தில் தொடர்ந்து பணிபுரிய விருப்பமில்லை என்று கூறியுள்ளார். தமிழக உள்துறை செயலாளருக்கு ராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ்.மங்கலம் போலீஸ் இன்ஸ்பெக்டர் சரவணன் கடிதம் ஒன்றை எழுதியிருப்பதாக கூறப்படுகிறது. அந்த கடிதத்தில், "நான், ராமநாதபுரம் மாவட்டம் திருவாடனை உட்கோட்டம், ஆர்எஸ் மங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன், நான் கடந்த 2008ம் ஆண்டு நேரடி சார்பு ஆய்வாளராக பதவி உயர்வு பெற்று காவல்துறையில் கடந்த 16 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். திருவாடானை உட்கோட்ட முகாம் அலுவலக எழுத்தர் தொடர்ந்து என்னிடம் கேட்காமல் ஆர்.எஸ். மங்கலம் காவல்நிலையத்தில் பணிபுரியும் காவலர்களுக்கு தன்னிச்சையாக தொடர்ந்து அலுவல்களை நியமித்து தமது அதிகாரத்தில் தலையிட்டு வருகிறார். இதுகுறித்து தங்களுக்கும் அறிக்கை அனுப்பி உள்ளேன்.

தற்போது காவல்நிலைய சரகத்தில் சட்டம் ஒழுங்கு மற்றும் பொது அமைதியை நிலைநாட்ட மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் எனது வாகன ஓட்டுநரை வேறு பணிக்கு வருமாறு ஆயுதப்படையில் இருந்து தன்னிச்சையாக எனது கவனத்துக்கு தெரிவிக்காமல் நேரடியாக காவலர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற செயல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் என்னுடைய போலீஸ் வேலையில் திறம்பட செயல்பட முடியவில்லை. தற்போது உத்திரகோசமங்கை ஆருத்ரா தரிசனத்துக்கு ஆர்.எஸ். மங்கலம் காவல் நிலையத்தில் இருந்து இன்ஸ்பெக்டர், 14 காவலர்களை என்னிடம் எவ்வித அறிவிப்பும் இன்றி தன்னிச்சையாக பணி நியமித்துள்ளனர்.

தனது காவல் நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட அதிகாரிகள், காவலர்களில் 10 பேர் தமது அனுமதி இல்லாமல் அயல்பணியாக பணிபுரிந்து வருகிறார்கள். ஆர்எஸ் புரம் காவல் நிலையத்தில் மொத்தம் 328 புலன் விசாரணை வழக்குகள், 162 குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மற்றும் 247 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது.

புலன்விசாரணை நிலையில் உள்ள 328வழக்குவிவரங்களைகுற்றப்பதிவு பணியக தரவுகளை சேமிக்கும் பணிக்கு சிறப்பு சார்பு இன்ஸ்பெக்டர் ஒருவர் மட்டுமே உள்ளார். அவரும் உடல்நிலை பாதிப்பால் அவதிப்படுவதால் சரியாக பணி செய்ய முடிவது இல்லை.

இதனால் வழக்குகளில் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய முடியாமல் வழக்குகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே செல்கிறது. எனவே , எனது காவல் நிலையத்தில் பணியாற்றும் அதிகாரிகள், காவலர்களுக்கு பொறுப்பு அதிகாரியான என்னை கேட்காமல் திருவாடானை உட்கோட்ட முகாம் அலுவலகத்தில் இருந்து மாவட்ட தனிப்பிரிவு அலுவலக உத்தரவின் பேரில் தன்னிச்சையாக பணி நியமித்து நிர்வாகத்தில் தலையிட்டு சீர்குலைவை ஏற்படுத்துவதால் காவல் ஆய்வாளராக பணியாற்ற விருப்பம் இல்லை. சட்டம் ஒழுங்கு காவல் நிலையங்களில் தொடர்ந்து பணிபுரிய விருப்பம் இல்லை" இவ்வாறு அதில் கூறப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது. இந்த கடிதம் வெளியாகி காவல்துறையினர் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# 1,100 காளைகள், 910 வீரர்களுடன் பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டி தொடங்கியது

மதுரை, ஜன.15

ஜல்லிக்கட்டை தமிழக வணிகம் மற்றும் பத்திர பதிவு துறை அமைச்சர் மூர்த்தி மற்றும் கலெக்டர் சங்கீதா கொடியசைத்து தொடங்கி வைக்கின்றனர். இதனை தொடர்ந்து, காளைகளை பிடிக்க வந்துள்ள மாடுபிடி வீரர்கள் உறுதிமொழி ஏற்றனர். இதன்பின்னர் ஜல்லிக்கட்டுபோட்டிகள்தொடங்கியுள்ளன.

ஜல்லிக்கட்டுக்கு 4,820 காளைகள் பதிவு செய்யப்பட்டு இருந்தன. எனினும், 1,100 காளைகளுக்கு போட்டியில் பங்கேற்க அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது.

1,900 மாடுபிடி வீரர்கள் ஆன்லைன் வழியே பதிவு செய்திருந்தனர். அவர்களில் 910 பேர் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டு உள்ளனர். வாடிவாசலில் இருந்து 1,100 காளைகள் ஒன்றன்பின் ஒன்றாக அவிழ்த்து விடப்படுகின்றன. அவற்றை பிடிக்க வீரர்களும் உற்சாகத்துடன் உள்ளனர்.

ஜல்லிக்கட்டு போட்டியை 10 சுற்றுகளாக நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. ஒவ்வொரு சுற்றிலும் 50 முதல் 70 வரையிலான வீரர்கள் போட்டியில் விளையாடுவார்கள். பாதுகாப்பு பணியில் 2,500 போலீசார் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

முதல் இடம் பிடிக்கும் காளைக்கு டிராக்டர் பரிசும், முதல் இடம் பிடிக்கும் வீரருக்கு கார் பரிசும் வழங்கப்பட உள்ளன. இதேபோன்று, மாடுபிடி



வீரர்களுக்கு தங்கம், வெள்ளி நாணயங்கள் வழங்கப்பட உள்ளன. டி.வி., பிரிட்ஜ், பீரோ, சைக்கிள், பைக், 2 சக்கர வாகனங்கள், தங்க காசு, வெள்ளி காசு, ரொக்க பணம், குக்கர், வேட்டி, அண்டா உள்ளிட்ட பரிசு பொருட்கள் வழங்கப்பட உள்ளன.

# பொள்ளாச்சியில் சர்வதேச வெப்பக் காற்று பலூன் திருவிழா கோலாகலம்

கோவை, ஜன.16

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் சர்வதேச வெப்பக் காற்று பலூன் திருவிழா கோலாகலமாக தொடங்கியது. இந்த பலூன் திருவிழா வரும் 16ந்தேதி வரை நடைபெற உள்ளது. இந்த பலூன்களில் பறந்தவாறு சுற்றுலா பயணிகள் பொள்ளாச்சியின் இயற்கை அழகை கண்டு ரசிக்கலாம். இந்த பலூன் திருவிழாவில் தமிழ்நாடு மட்டுமல்லாது பிரேசில், இங்கிலாந்து, ஆஸ்திரியா, வியட்நாம், தாய்லாந்து, பிரான்ஸ், பெல்ஜியம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளை சேர்ந்த வண்ணமயமான வெப்பக் காற்று







பலூன்கள் வானை அலங்கரித்தன.

# பூக்கும் புன்னகை ஒவ்வொன்றிலும் மனம் நிறைகிறேன் முதல் அமைச்சர் மு.க ஸ்டாலின்

சென்னை, ஜன.16

சமூக சேவகர், மனித உரிமை போராளி, மாடல் என பன்முகத் திறமைகளை கொண்டவர் மாளவிகா ஐயர். இவர் சிறு வயதில், குண்டு வெடிப்பினால் பாதிக்கப்பட்டு இரண்டு கைகளையும் இழந்தார். கடந்த 2020 ஆம் ஆண்டு மகளிர் தினத்தில், பிரதமர் மோடியின் ட்விட்டர் கணக்கை ஒருநாள் நிர்வகிக்கும் பொறுப்பு 7 சாதனைப் பெண்களுக்கு வழங்கப்பட்டது. அதில் ஒரு சாதனைப் பெண்தான் இந்த





டாக்டர் மாளவிகா ஐயர்.

இவர் தனது எக்ஸ் தளத்தில், தமிழக அரசின் விலையில்லா பொங்கல் சேலையில் விலை மதிப்பில்லாத புன்னகையுடன் உங்கள் மாளவிகா! பொங்கல் பண்டிகை ஒவ்வொருவரின் மனதில் மகிழ்ச்சியையும் உடலில் உற்சாகத்தையும் கொண்டு வரட்டும்" என பதிவிட்டு இருந்தார்.

இவரது பதிவை குறிப்பிட்டுள்ள முதல் அமைச்சர் மு.க ஸ்டாலின், "பூக்கும் புன்னகை ஒவ்வொன்றிலும் மனம் நிறைகிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.

தமிழக அரசின் விலையில்லா பொங்கல் திட்டம் குறித்த நெகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக முதல் அமைச்சர் மு.க ஸ்டாலின், மாளவிகா ஐயரின் பதிவை பகிர்ந்துள்ளார்.


# அவனியாபுரம் ஜல்லிக்கட்டு: 19 காளைகளை அடக்கிய வீரருக்கு கார் பரிசு

மதுரை, ஜன.16

பொங்கல் பண்டிகையையொட்டி ஆண்டுதோறும் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடந்து வருகின்றன. பொங்கல் பண்டிகையான இன்று அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு போட்டி நடந்து வந்தது. இந்த சூழலில் மதுரை அவனியாபுரத்தில் நடைபெற்று வந்த ஜல்லிக்கட்டு போட்டி 11 சுற்றுகளுடன் நிறைவடைந்தது.

முன்னதாக இன்று காலை 6.30 மணிக்கு அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டிகள் தொடங்கியது. போட்டி தொடங்கியதில் இருந்தே, மாடு பிடி வீரர்கள், திமிறி வரும் காளைகளின் திமிலை பிடித்து அடக்கி வருகிறார்கள். ஒரு சில காளைகள் வீரர்களிடம் பிடிபடாமல் சென்றது. ஒருசில காளைகள் வீரர்களை முட்டி தாக்கியது. இதில் காயமடைந்த வீரர்கள் உடனடியாக வெளியே நிறுத்தப்பட்டிருந்த ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில் மஞ்சள், இளஞ்சிவப்பு, நீல நிறம் அணிந்த வீரர்கள் சுற்றுக்கு தலா 50 பேர் வீதம் களம் கண்டனர். 10 சுற்றுகள் முடிந்த பிறகு, அனைத்து சுற்றுகளிலும் முன்னிலை வகித்த 30 பேர் வீர்ரகள் தேர்வு செய்யப்பட்டு, இறுதிச் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டனர். இந்த இறுதிச் சுற்றின்போது மதுரை அவனியாபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. மழையை பொருட்படுத்தாமல், வீரர்கள் காளைகளை அடக்கியதை பார்வையாளர்கள் கண்டு ரசித்தனர்.

இந்நிலையில் அவனியாபுரம் ஜல்லிக்கட்டுப் போட்டியில் 19 காளைகளை அடக்கி திருப்பரங்குன்றம் கார்த்திக் முதலிடம் பெற்றுள்ளார். 15 காளைகளை அடக்கி குன்னத்தூர் அரவிந்த் திவாகர் இரண்டாம் இடமும், 14 காளைகளை அடக்கி திப்புவனம் முரளிதரன் மூன்றாம் இடமும் பிடித்தனர். இந்த ஆண்டு தமிழக முதல்அமைச்சர், துணை முதல்அமைச்சர் சார்பில், பிடிபடாத சிறந்த காளையின் உரிமையாளருக்கு டிராக்டர் மற்றும் சிறந்த மாடுபிடி வீரருக்கு கார் பரிசு அளிக்கப்படுகிறது. இதன்படி 19 காளைகளை அடக்கி முதல் பரிசான ரூ.8.50 லட்சம் மதிப்புள்ள நிசான் காரை திருப்பரங்குன்றம் கார்த்திக் பெற்றுக்கொண்டார். மேலும் கன்றுடன் கூடிய



பசுவும் அவருக்கு வழங்கப்பட்டன. 15 காளைகளை அடக்கிய குன்னத்தூர் அரவிந்த் திவாகருக்கு இரண்டாம் பரிசான இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது.

இதேபோல பிடிபடாத சிறந்த காளையின் உரிமையாளருக்கு முதல் பரிசாக ரூ.10 லட்சம் மதிப்புள்ள டிராக்டர் பரிசு வழங்கப்பட்டது. இதன்படி சிறந்த காளைக்கான முதல் பரிசை வி.கே.சசிகலாவின் காளை வென்றது. காளை வளர்ப்பாளர் மலையாண்டி பரிசுகளை பெற்றுக் கொண்டார். மேலும் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த் சார்பில் பசுவும் கன்றும் பரிசாக அளிக்கப்பட்டது. முன்னதாக ஜல்லிகட்டில் சசிகலாவின் காளை பங்கேற்ற நிலையில், வீரர்கள் சூழந்து நின்றபோதும் கம்பீரமாக நின்று வேட்டையாடிய காளையை மாடு பிடி வீரர்கள் ஒருவரால் கூட பிடிக்கமுடியவில்லை. ஜி.ஆர்.கார்த்திக் என்பவரது காளைக்கு இரண்டாவது பரிசாக இரு சக்கர வாகனம் வழங்கப்பட்டது. வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர்கள் மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், கலெக்டர் சங்கீதா ஆகியோர் வழங்கினர்.

இந்தப் போட்டியில், பங்கேற்ற மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்கள், பார்வையாளர்கள், காவலர்கள் உட்பட 45 பேர் காளைகள் முட்டியதில் காயமடைந்தனர். இதில் 12 பேர் மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். மேலும், போட்டியின் போது காளை ஒன்று மார்பில் முட்டியதில், படுகாயமடைந்து ரத்தக் காயங்களுடன் மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நவீன் என்பவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியது.

# ஒரே நாடு ஒரே தேர்தல் அவசியம் என்பதை யாரும் மறுக்க முடியாது: ஆடிட்டர் குருமூர்த்தி பேச்சு

சென்னை, ஜன.16

துக்ளக் இதழின் 55வது ஆண்டு நிறைவு விழாவில் ஆடிட்டர் குருமூர்த்தி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

சீமானுக்கும் எனக்கும் கருத்து ஒற்றுமை இருப்பதாக சொல்ல முடியாது. ஆனால்அரசியலில்முதன் முதலாக பெரியாரை நேரடியாக எதிர்த்ததற்காக நான் அவரை பாராட்டுகிறேன். உலகத்தில் பிறந்த யாராக இருந்தாலும் பெரியாரை எதிர்த்து சிலர் பேசத்தான் செய்வார்கள். அதை நாம் ஒன்றும் செய்ய முடியாது. பெரியாருக்கு எதிராக கருத்து பேசுகிறவர்களை எல்லாரும் சேர்ந்து பாய்வது என்பது



தமிழகத்தில் 50, 60 ஆண்டுகளாக உள்ளது. அதை பத்திரிகை துறையில் உடைத்தவர் சோ. இப்போது சீமான் அரசியலில் உடைத்துக் கொண்டு இருக்கிறார். இது தமிழ் நாட்டிற்கு நல்லது.

ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது அவசியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், இன்றைய அரசியல் சூழ்நிலையில், பாஜக கொண்டு வருகிறது என்பதற்காகவே அதற்கு எதிர்ப்பு தேவைப்படுகிறது இந்த நாட்டில் 1967ம் ஆண்டு வரை ஒரே தேர்தல் தான் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது, தனியாக தேர்தல் நடத்தக்கூடாது. அதற்கு செலவாகும். எனவே, ஒட்டுமொத்த தேர்தல் நடத்த வேண்டும் என்று கூறியதே கருணாநிதி தான். அதெல்லாம் மக்களுக்கு மறந்துவிட்டது.ஒரு புதிய சூழ்நிலை உருவாகியுள்ளதால் எதிர்க்கிறார்கள். இது சாத்தியமா? இல்லையா? என்பதை இப்போதைக்கு கூற முடியாது" இவ்வாறு குருமூர்த்தி பேசினார்.

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்: பரப்புரையை தொடங்கிய தி.மு.க.வினர்

ஈரோடு, ஜன.16

கடந்த 2021ம் ஆண்டு நடந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திருமகன் ஈவெரா வெற்றி பெற்றார். அவரது மறைவுக்குப் பிறகு 2023ம் ஆண்டு பிப்ரவரி 27ம் தேதி நடந்த இடைத்தேர்தலில், தி.மு.க. கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வெற்றி பெற்றார். அவரது மறைவால் வரும் பிப்ரவரி 5ம் தேதி ஈரோடு கிழக்கில் 2வது முறையாக இடைத்தேர்தல் நடைபெறுகிறது. 2021முதல்ஈரோடுகிழக்கு தொகுதியில் 2 முறை காங்கிரஸ் வெற்றி பெற்ற நிலையில், இந்த முறை ஆளும் தி.மு.க.வே களம் காண்கிறது. ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5ம் தேதி நடக்கிறது. அ.தி.மு.க, பா.ஜ.க., தே.மு.தி.க. ஆகிய கட்சிகள் இந்த இடைத்தேர்தலை புறக்கணித்துள்ள நிலையில், தி.மு.க. சார்பில் வி.சி. சந்திரகுமார் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பரப்புரையை தி.மு.க. இன்று



தொடங்கி உள்ளது. இதன்படி பெரியார் நகரில் தி.மு.க. வேட்பாளர் சந்திரகுமார் மற்றும் அமைச்சர் முத்துசாமி உள்ளிட்டோர் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தனர்.

# "அமைச்சர் பொன்முடி மீது சேற்றை வீசிய பொதுமக்களை கைது செய்வதா?" டி.டி.வி.தினகரன் கண்டனம்

சென்னை, ஜன.16

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது,

அமைச்சர் பொன்முடி அவர்கள் மீது சேறு வீசியதற்காக பொதுமக்களை கைது செய்து பழிவாங்குவதா ?. ஆதங்கத்தை வெளிப்படுத்திய பொதுமக்கள் மீது அடக்குமுறையை கையாண்டிருக்கும் தி.மு.க அரசின் அதிகாரப்போக்கு கடும் கண்டனத்திற்குரியது.

வனத்துறை அமைச்சர் பொன்முடி அவர்கள் மீது சேறு வீசியதாகக் கூறி விழுப்புரம் மாவட்டம் இருவேல்பட்டு கிராமத்தைச் சேர்ந்த சிலரை வீடு புகுந்து காவல்துறையினர்



வலுக்கட்டாயமாக கைது செய்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த மாதம் பெய்த கனமழையால் ஏற்பட்ட பாதிப்பின் போது தங்களை சந்திக்க வராத அமைச்சர் பொன்முடி அவர்கள்மீது ஆதங்கத்தை வெளிப்படுத்திய பொதுமக்களை காவல்துறையினர் மூலம் பழிவாங்கும் நடவடிக்கையில் இறங்கியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

சாத்தனூர் அணையிலிருந்து முன் அறிவிப்பின்றி திறக்கப்பட்ட ஒரு லட்சத்திற்கும் அதிகமான கன அடி நீரால் இரவோடு இரவாக வாழ்வாதாரத்தை இழந்துதவித்த மக்களுக்கு முறையான நிவாரணம் கூடவழங்கப்படாதநிலையில், பாதிக்கப்பட்ட மக்கள்மீதே மீண்டும் அடக்குமுறையை கையாண்டிருப்பது தி.மு.க அரசின் அதிகாரப்போக்கையே வெளிப்படுத்துகிறது.

எனவே, காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்ட இருவேல்பட்டு கிராமத்தைச் சேர்ந்தவர்களை எந்தவித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுவிப்பதோடு, இனி வரும் காலங்களில் அப்பகுதி மீதான பழிவாங்கும் நடவடிக்கையையும் கைவிட வேண்டும் என முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைவலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "அமைச்சர் பொன்முடி மீது சேற்றை வீசிய பொதுமக்களை தேடி கைது செய்வதா?" அண்ணாமலை கண்டனம்

சென்னை, ஜன.16

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

மெட்ரோ தூணில் ஒட்டப்பட்ட முதல்அமைச்சர் ஸ்டாலின் போஸ்டர் மீது செருப்பால் அடித்த வயதான தாயார் ஒருவரைத் தேடி அலைந்தார்கள். தற்போது, அமைச்சர் பொன்முடி மீது சேற்றை வீசிய பொதுமக்களைத் தேடி அலைகிறார்கள். தி.மு.க. ஆட்சி நடக்கும் லட்சணத்திற்கு, இனி இதுவே முழு நேரவேலையாக இருக்கும் எனத் தெரிகிறது.

கடந்த டிசம்பர் மாதம் விழுப்புரம் மாவட்டம் இருவேல்பட்டு கிராமத்தில், பெஞ்சல் புயல் பாதிப்புகளைப் பார்வையிடச் சென்ற அமைச்சர் பொன்முடி, காரில் இருந்து இறங்காமல், பாதிப்பு குறித்து விசாரித்ததால், அவர் மீது சேறு வீசப்பட்டிருக்கிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள், தங்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்காததால் ஏற்பட்ட ஆதங்கத்தாலும், இயலாமையினாலும் நடைபெற்ற நிகழ்வே தவிர, தனிப்பட்ட காரணங்களுக்காக அல்ல. இதனைப் பெருந்தன்மையாகவிட்டு விடுவதாக அமைச்சர் பொன்முடி அப்போது கூறிவிட்டு, தற்போது, அந்தக் கிராம மக்கள் மீது காவல்துறையை ஏவி விட்டு வெறியாட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். விசாரணை என்ற பெயரில், கிராம மக்களைக் காவல் நிலையம் அழைத்து துன்புறுத்துவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய பெண்கள் உட்பட அனைவரையும் பலவந்தமாகக் கைதுசெய்திருக்கிறார்கள்.

காவல்துறை ஆய்வாளர் ஒருவர், ஒரு சகோதரியின் கைகளைப் பிடித்து இழுக்கும் காணொளியைக் காண நேர்ந்தது. இது பெண்களைக் கைது செய்யும்போது, மகளிர் காவலர்கள் இருக்க வேண்டும் என்ற அடிப்படை வரைமுறையை முற்றிலும் மீறியிருப்பதாகும்.



புயல் பாதிப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்கள், இன்னும் முழுமையாக மீண்டெழவில்லை. தி.மு.க. அரசு புயல் பாதிப்புகளைச் சரியாகக் கணிக்கத் தவறியதோடு, மிகவும் மெத்தனப் போக்கில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டதைத் தமிழக மக்கள் அறிவார்கள். நான்கு பேரை வைத்து சினிமா ஷூட்டிங் நடத்தி, நல்லாட்சி நடக்கிறது என்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கும் முதல்அமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான அமைச்சர்களுக்கு, பொதுமக்களிடையே இருக்கும் எதிர்ப்பை எதிர்கொள்ள முடியாமல், பொதுமக்கள் மீது அதிகார வன்முறையைப் பிரயோகிக்கிறார்கள்.

முதல் அமைச்சர் ஸ்டாலின், தங்கள் ஆட்சியின் அவலத்தைச் சரி செய்யாமல், அப்பாவி பொதுமக்களைத் துரத்துவது ஏன்? தி.மு.க. அரசு, இந்த உளுத்துப் போன காரணங்களைச் சொல்லி பொதுமக்களைப் பழிவாங்குவதை நிறுத்தி விட்டு, பெஞ்சல் புயல் நிவாரணப் பணிகள், பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் கிடைத்திருக்கிறதா என்பதை உறுதி செய்யும் பணிகளில் உடனடியாக கவனத்தைச் செலுத்த வேண்டும் என்றும், இருவேல்பட்டு கிராம மக்கள் மீதான நடவடிக்கைகளை உடனடியாகக் கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி நிறைவு

மதுரை, ஜன.16

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை இன்று சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு மதுரை அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு போட்டி கோலாகலமாக நடைபெற்றது. வாடிவாசலில் இருந்து அவிழ்த்து விடப்பட்ட காளைகளை மாடுபிடி வீரர்கள் உற்சாகத்துடன் பிடித்தனர்.

காலை 6.30 மணிக்கு தொடங்கிய ஜல்லிக்கட்டு போட்டி, மாலை 6 மணியளவில் நிறைவு பெற்றது. இதில் 19 காளைகளை அடக்கி திருப்பரங்குன்றத்தை சேர்ந்த மாடுபிடி வீரர் கே.கார்த்தி முதலிடம் பிடித்தார். அவருக்கு






முக அரசு சார்பில் நிசான் கார் மற்றும் கன்றுடன் பசு ஆகியவை பரிசாக வழங்கப்பட்டன்.

குன்னத்துரை சேர்ந்த மாடுபிடி வீரர் அரவிந்த் திவாகர் 15 காளைகளை அடக்கி 2வது இடத்தை தட்டிச் சென்றார். திருப்புவனத்தை சேர்ந்த மாடுபிடி வீரர் முரளிதரன் 14 காளைகளை அடக்கி 3வது இடம் பிடித்தார்.

சிறந்த காளையாக மலையாண்டி என்பவரின் காளை தேர்வு செய்யப்பட்டது. காளையின் உரிமையாளருக்கு டிராக்டர் மற்றும் கன்றுடன் பசு ஆகியவை பரிசாக வழங்கப்பட்டன.

# 108வது பிறந்த நாள்: எம்.ஜி.ஆர். சிலைக்கு 17ந் தேதி அதிமுக மரியாதை



சென்னை, ஜன.16

அதிமுக தலைமைக்கழகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

அதிமுக நிறுவனத்தலைவர் எம்.ஜி.ஆரின் 108வது பிறந்த நாளான வருகிற 17ந்தேதி (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு சென்னை ராயப்பேட்டை அவ்வை சண்முகம் சாலை, தலைமைக் கழக எம்.ஜி.ஆர். மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். உருவச் சிலைக்கு பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி, கட்சி கொடியை ஏற்றி வைத்து இனிப்பு வழங்க உள்ளார். அதனைத்தொடர்ந்து, தலைமைக் கழக செயலாளர்கள் மலர்தூவி மரியாதை செலுத்த உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில், அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும், அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் தங்கள் பகுதியில் உள்ள எம்.ஜி.ஆர். சிலைகளுக்கு மாலை அணிவித்தும், ஆங்காங்கே அவரது உருவப்படத்தை வைத்தும் மாலை அணிவித்து மரியாதை செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அதேபோல், புதுச்சேரி, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, மராட்டியம், கேரளா, டெல்லி மற்றும் அந்தமான் உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் எம்.ஜி.ஆர். சிலைகள், படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஈரோடு இடைத்தேர்தல்: நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அறிவிப்பு



சென்னை, ஜன.16

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5ந் தேதி நடக்கிறது. இதற்கான வேட்பு மனு தாக்கல் கடந்த 10ந் தேதி ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் தொடங்கியது. இந்த இடைத்தேர்தலில் திமுக சார்பில் வி.சி.சந்திரகுமார் களம் இறக்கப்பட்டுள்ளார்.

இடைத்தேர்தலை புறக்கணிப்பதாக பிரதான எதிர்க்கட்சியான அதிமுக அறிவித்துள்ளது. அதே கூட்டணியில் அங்கம் வகிக்கும் தேமுதிகவும் தேர்தலில் போட்டியிடவில்லை. தேசிய கட்சியான பா.ஜனதாவும் தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்துவிட்டது. இதனால், வாக்குப்பதிவுக்கு முன்பே தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருப்பதாக கூறப்படுகிறது.

இந்தத் தேர்தலில், சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சியும் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளது. இதனால் தேர்தலை புறக்கணித்த அதிமுக, பாஜக, தேமுதிக ஆகிய கட்சிகளின் ஓட்டு யாருக்கு கிடைக்கும்? என்ற எதிர்பார்ப்பும் கிளம்பியுள்ளது.

இந்தநிலையில், ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான நாம் தமிழர் கட்சியின் வேட்பாளராக சீதாலட்சுமி அறிவிக்கப்பட்டுள்ளார். இவர் பொங்கல் பண்டிகை 3 நாட்கள் விடுமுறை கழித்து வேட்பு மனு தாக்கல் செய்வார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

வருகின்ற 05022025 அன்று, தமிழ்நாட்டில் நடைபெறவிருக்கும் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சி சார்பாக என் அன்புத்தங்கை மா.கி.சீதாலட்சுமி (முதுகளை ஆய்வியல் நிறைஞர் (M.A. M. Phil.) அவர்கள் போட்டியிடவிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கட்சியின் மாநில, மண்டல, மாவட்ட, தொகுதி உள்ளிட்ட அனைத்து நிலைப் பொறுப்பாளர்களும், அனைத்துப் பாசறைகளின் அனைத்துநிலைப் பொறுப்பாளர்களும், நாம் தமிழர் உறவுகளும், ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலில் தாம் தமிழர் கட்சியின் வெற்றிக்கு முழு ஒத்துழைப்பை நல்குமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஈரோடு கிழக்கு தொகுதிக்கு 284 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் ஒதுக்கீடு




ஈரோடு, ஜன.16

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5ந்தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு ஈரோடு கிழக்கு தொகுதியில் வாக்குப்பதிவிற்காக 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தலா 480 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், வி.வி.பேடு, கட்டுப்பாட்டு கருவி ஆகியவை முதல்கட்ட சரிபார்ப்பு பணி கடந்த 11ந்தேதி முடிக்கப்பட்டு, மாவட்ட மின்னணு வாக்குப்பதிவு எந்திர கிடங்கில் தயார் நிலையில் உள்ளன.

இதில் 237 வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான எந்திரங்கள் மற்றும் கூடுதலாக 20 சதவீதம் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், 20 சதவீதம் கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் 30 சதவீதம் வி.வி.பேடு கருவிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அதன்படி 284 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், 284 கட்டுப்பாட்டு கருவிகள், 308 வி.வி.பேடு கருவிகள், இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் கணினி சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தநிகழ்ச்சிக்கு ஈரோடு மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா தலைமை தாங்கினார். இதில் ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையாளருமான மனிஷ், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) முஹம்மது குதுரத்துல்லா, தேர்தல் தாசில்தார் சிவசங்கர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இதனிடையே இடைத்தேர்தலில் பயன்படுத்தக் கூடிய மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில், மாதிரி ஓட்டுப்பதிவு நடந்தது. இந்த பணிகள் நிறைவடைந்ததை தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை கணினி சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதையடுத்து தேர்தலுக்கு பயன்படுத்தப்பட உள்ள எந்திரங்கள் மாநகராட்சி ஆணையாளரும், தேர்தல் நடத்தும் அதிகாரியுமான மனிஷிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதையடுத்து நேற்று மாலையில் 284 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், 284 கட்டுப்பாட்டு கருவிகள், 308 வி.வி.பேட் கருவிகள் ஆகியன குடோனில் இருந்து போலீஸ் பாதுகாப்புடன் மாநகராட்சி அலுவலக பாதுகாப்பு அறைக்கு கொண்டு செல்லப்பட்டன.

அங்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள்முன்னிலையில் எந்திரங்கள் பாதுகாப்பாகவைக்கப்பட்டுஅந்த அறைக்கு சீல் வைக்கப்பட்டது. மேலும், அறையின் முன்பு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

# 'அறுவடைத் திருநாளின் குறியீடாக ஜல்லிக்கட்டு விளங்குகிறது' சு.வெங்கடேசன் எம்.பி.



மதுரை, ஜன.16

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை இன்று சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு மதுரை அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு போட்டி கோலாகலமாக நடைபெறுகிறது. இந்நிலையில், மதுரை எம்.பி. சு.வெங்கடேசன் அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியை நேரில் பார்வையிட்டார். இதன் பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், "பொங்கல் பண்டிகை என்பது அறுவடைத் திருநாள். இந்த அறுவடைத் திருநாளின் முக்கியமான குறியீடாக ஜல்லிக்கட்டு விளங்குகிறது. இது கால்நடைக்கும், மனிதனுக்கும் இடையேயான உறவின் குறியீடு. ஜல்லிக்கட்டு போட்டியில் வீரன் அல்லது காளை என யார் வேண்டுமானாலும் வெற்றி பெறலாம், ஆனால் யாரும் தோற்க மாட்டார்கள். அப்படி ஒரு வடிவம் இந்த விளையாட்டிற்கு இருக்கிறது. இந்த விளையாட்டில் இன்னும் சில விஷயங்களைமேம்படுத்தவேண்டியிருக்கிறது. வீரர்களுக்கு காயம் ஏற்படாத வகையில் பல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பது நல்ல விஷயமாக உள்ளது" என்று தெரிவித்தார்.

# மதுபாட்டிலில் தவளை கிடந்ததால் பரபரப்பு




திருச்சி, ஜன.16

திருச்சி மாவட்டம் வாத்தலை அருகே உள்ள சென்னக்கரை பகுதியை சேர்ந்தவர் வேல்முருகன். கூலித்தொழிலாளியான இவர்நேற்றுசிறுகாம்பூரில் உள்ள அரசு டாஸ்மாக் கடையில் மது பாட்டில் வாங்கி குடித்துள்ளார். இருட்டான பகுதியில் அமர்ந்து குடித்தபோது பாட்டிலில் ஏதோ அடைப்பு இருந்திருக்கிறது. உடனடியாக செல்போன் டார்ச் லைட் அடித்து பார்த்தபோது மது பாட்டிலில் இறந்த நிலையில் தவளை இருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தார்.

இதனையடுத்து மது பாட்டிலுடன் டாஸ்மாக் கடைக்கு சென்ற வேல்முருகன் அங்கு விற்பனை பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்களிடம் கூறி முறையிட்டுள்ளார். ஆனால் இதனை பொருட்படுத்தாத டாஸ்மாக் ஊழியர்கள் அவரை தகாத வார்த்தைகளால் திட்டி கையில் இருந்த மது பாட்டிலை பிடுங்கி கீழே வீசி உடைத்ததாக கூறப்படுகிறது. இதனையடுத்து சிறுகாம்பூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு முதலுதவி சிகிச்சை பெற்றார். பின்னர் மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இது குறித்து வாத்தலை போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மது பாட்டிலில் தவளை கிடந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# கோவையில் வாலிபரின் கன்னத்தில் அறைந்த போலீஸ் ஏட்டு காவல் கட்டுப்பாட்டு அறைக்கு மாற்றம்



கோவை, ஜன.17

கோவை சின்னவேடம்பட்டியை சேர்ந்தவர் மோகன்ராஜ். இவர்கோவை நல்லாம்பாளையத்தில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். இந்த நிலையில் அவர்தான்வேலைசெய்து வரும் நிறுவனத்தில் பொங்கல் விழா கொண்டாடுவதற்காக தேவையான பொருட்கள் வாங்க அந்த பகுதியில் உள்ள கடைக்கு சென்றார்.

பின்னர் பொருட்கள் வாங்கி முடித்த பின்னர் தனது நிறுவனத்துக்கு திரும்பினார். அப்போது அவர் அந்தப்பகுதியில் உள்ள சாலையை கடக்க முயன்றார். சாலையில் இருசக்கர வாகனங்கள் அதிகமாக வந்து கொண்டு இருந்ததால் அதை கவனித்தபடி சாலையை கடக்க முயன்றார்.

அப்போது அவர் சாலையின் நடுவே வந்தபோது போலீஸ் ஏட்டு ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்ததால், அதை கவனித்த மோகன்ராஜ், சாலையின் நடுவே நின்றுவிட்டார். அவர் அருகே வந்தபோது திடீரென்று போலீஸ் ஏட்டு மோகன்ராஜ் கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டு எதுவும் நடக்காததுபோன்று மோட்டார் சைக்கிளில் சென்றார். இந்த காட்சி அந்தப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவானது. அந்த வீடியோ சமூக வலைத்தளத்தில் வைரலானது.

எனவே வாலிபரை கன்னத்தில் அறைந்த போலீஸ் ஏட்டு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இதையடுத்து போலீஸ் கமிஷனர் சரவணசுந்தர் உத்தரவின்பேரில் அந்த போலீஸ் ஏட்டு யார் என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தினர். அதில் அவர் கவுண்டம்பாளையம் போலீஸ் நிலையத்தில் ஏட்டாக பணிபுரிந்து வரும் ஜெயப்பிரகாஷ் என்பது தெரியவந்தது. இதையடுத்து அவரை காவல் கட்டுப்பாட்டு அறைக்கு மாற்றம் செய்து கமிஷனர் உத்தரவிட்டார். இது தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பிறந்த நாள்: அண்ணாமலை, டி.டி.வி. தினகரன் வாழ்த்து



சென்னை, ஜன.16

தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் இன்று தன்னுடைய பிறந்தநாளை கொண்டாடுகிறார். இந்த நிலையில் ஓ.பன்னீர்செல்வம் பிறந்த நாளை முன்னிட்டு தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை மற்றும் அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அண்ணாமலை வெளியிட்டுள்ள பதிவில், "தமிழகத்தின் முன்னாள் முதல்அமைச்சரும், மூத்த அரசியல் தலைவர்களுள் ஒருவருமான அன்பு அண்ணன் ஓ.பன்னீர்செல்வம் அவர்களுக்கு, இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணன் ஓ.பன்னீர்செல்வம், நல்ல உடல் நலத்துடன், நீண்ட ஆயுளுடன் தொடர்ந்து தமது மக்கள்பணிகள்மேற்கொள்ள வேண்டிக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

டி.டி.வி. தினகரன் வெளியிட்டுள்ள பதிவில், "முன்னாள் முதலமைச்சரும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக்குழுவின் ஒருங்கிணைப்பாளரும் அன்பிற்குரிய சகோதருமான ஓ.பன்னீர்செல்வம் அவர்களுக்கு எனது மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். ஓ.பன்னீர்செல்வம், நீண்ட ஆயுளோடும், நல்ல உடல் நலத்தோடும் தொடர்ந்து மக்கள் பணியாற்ற எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கி றேன்" என்று தெரிவித்துள்ளார்.

# இனியாவது மக்களின் உணர்வுகளை மதித்து முடிவுகளை எடுக்க வேண்டும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்




சென்னை, ஜன.16

தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறியிருப்பதாவது;

யுஜிசி நெட் தேர்வுகளை வேறொரு நாளுக்கு மாற்ற வேண்டும் என்று மத்தியக் கல்வி மந்திரிக்குக் கடிதம் எழுதியிருந்தேன். தற்போது அத்தேர்வு ஒத்தி வைக்கப்பட்டிருப்பது சரியான முடிவு! தமிழ்ப் பண்பாட்டுத் திருநாட்டின் போது முக்கியத் தேர்வுகள் நடைபெறும் என மத்திய அரசு அறிவிப்பு, மாநில அரசின் தலையீட்டுக்குப் பிறகு அது ஒத்திவைக்கப்படுவது வாடிக்கையாகிவிட்டது.

இனியாவது நாட்டில் செயல்படும் எந்தவொரு அமைப்பும், நமது நாட்டின் பன்முகத்தன்மையையும் இங்கு வாழும் அனைத்துத் தரப்பு மக்களின்உணர்வுகளையும் மதித்து முடிவுகளை எடுப்பார்கள் என நம்புவோம்! என அதில் தெரிவித்துள்ளார்.

# திருவண்ணாமலையில் அண்ணாமலையாரை தரிசிக்க குறுக்கு வழியில் சென்றவர்கள் மீது தாக்குதல்



திருவண்ணாமலை, ஜன.16

திருவண்ணாமலையில் மலையையே சிவனாக வழிபடுவதால் அண்ணாமலையார் கோவில் பின்புறம் உள்ள மலையை சுற்றி பவுர்ணமி நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல்கின்றனர்.

இந்த நிலையில், திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் நேற்று பவுர்ணமியை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்வதற்காக வருகை தந்தனர். பக்தர்கள் கோவிலில் நீண்ட வரிசை நின்று சாமி தரிசனம் செய்தனர். அவ்வாறு வரிசையில் வந்த சென்னை சேர்ந்த விக்னேஷ், பாலாஜி, ஹரிகரன்,

சூர்யா ஆகிய 4 பேர் அம்மன் சன்னதி கொடி மரத்தின் அருகே வரும் பொழுது வரிசையில் இருந்து இரும்பு தடுப்பை தாண்டி வெளியே வந்து அம்மன் சன்னதிக்குள் குறுக்கு வழியாக செல்ல முயன்றதாக கூறப்படுகிறது.

அப்போது அம்மன் சன்னதியில் பணியாற்றிய கோவில் ஊழியர் பாண்டியன் அவர்களை தடுத்து கண்டித்ததாக தெரிகிறது. இதனால் இவர்களுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. ஆத்திரமடைந்த அவர்கள், பாண்டியனை தாக்கி உள்ளனர். இதில்படுகாயம்அடைந்த அவர் சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்சேர்க்கப்பட்டார்.

இதுகுறித்த புகாரின் பேரில்திருவண்ணாமலை டவுன் போலீசார் வழக்குப்பதிவு செய்து விக்னேஷ், பாலாஜி, ஹரிகரன், சூர்யா ஆகிய 4 பேரை கைது செய்தனர்.

# காளையை அடக்கி 1 லட்ச ரூபாய் பரிசு பெற்ற வீரர் காயங்களுடன் சிகிச்சைக்காக அனுமதி

மதுரை, ஜன.16

தைப்பொங்கல் திருநாளான இன்று மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில்ஜல்லிக்கட்டுபோட்டி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்க 1,100 காளைகளுக்கும், 900 வீரர்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வெற்றி பெறும் சிறந்த காளைக்கு டிராக்டரும், முதலிடம் பிடிக்கு மாடுபிடி வீரருக்கு காரும் பரிசாக வழங்கப்பட உள்ளது.



முதலில் கோவில் காளைகள் அவிழ்த்துவிடப்பட்டன. அதனை தொடர்ந்து வாடிவாசலில் சீறி வரும் காளைகளை போட்டி போட்டு கொண்டு வீரர்கள் மடக்கி பிடித்து வருகின்றன. ஒவ்வொரு சுற்றுகளாக காளைகள் அவித்துவிடப்படுகின்றன. ஒவ்வொரு சுற்றுக்கும் கலர் கலர் வண்ண டிசர்ட்களை அணிந்துகளத்தில்இறங்கி வருகின்றனர். ஒவ்வொரு காளை அவிழ்த்து விடும் போதும் 2 சக்கர வாகனம், தங்க காசு, வெள்ளி காசு, ரொக்க பணம், குக்கர், வேட்டி, அண்டா போன்ற பாத்திரங்கள் உள்ளிட்ட பரிசு பொருட்கள் அளிக்கப்படுகின்றன.

தற்போது வரை 8 சுற்றுகள்நிறைவடைந்துள்ளன. தற்போது 9வது சுற்று விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இந்நிலையில், சிவகங்கை மாவட்டம் ஆவாரங்காட்டைச் சேர்ந்த முத்துக்காளை, ரவிமணிமாறன்பிரதர்ஸ்ன் காளையை அடக்கினால் ரூ.1 லட்சம் மற்றும் 2 தங்க காசுகள் பரிசு என அறிவிக்கப்பட்டது.

விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் அந்த மாட்டை அவனியாபுரத்தை சேர்ந்த ரஞ்சித் என்ற மாடுபிடி வீரர் பாய்ந்து பிடித்தார். இதனையடுத்து களத்திலேயே ரூ.1 லட்சம்பரிசுத்தொகை மற்றும் 2 தங்க காசுகள் அமைச்சர் மூர்த்தியின் கையால் அவருக்கு வழங்கப்பட்டது.

இந் நிலையில் காளையை அடக்கி ஒரு லட்ச ரூபாய் பரிசு பெற்ற அவனியாபுரத்தை சேர்ந்த ரஞ்சித் காயங்களுடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அவனியாபுரம் ஜல்லிக்கட்டு: 9வது சுற்று நிறைவு 3 பேர் இறுதி சுற்றுக்கு தேர்வு

மதுரை, ஜன.16

தைப்பொங்கல் திருநாளான இன்று மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில்ஜல்லிக்கட்டுபோட்டி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்க 1,100 காளைகளுக்கும், 900 வீரர்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வெற்றி பெறும் சிறந்த காளைக்கு டிராக்டரும், முதலிடம் பிடிக்கு மாடுபிடி வீரருக்கு காரும் பரிசாக வழங்கப்பட உள்ளது.

முதலில் கோவில் காளைகள் அவிழ்த்துவிடப்பட்டன. அதனை தொடர்ந்து வாடிவாசலில் சீறி வரும் காளைகளை போட்டி போட்டு கொண்டு வீரர்கள் மடக்கி பிடித்து வருகின்றன. ஒவ்வொரு சுற்றுகளாக காளைகள் அவித்துவிடப்படுகின்றன. ஒவ்வொரு சுற்றுக்கும் கலர் கலர் வண்ண டிசர்ட்களை அணிந்து களத்தில் இறங்கி வருகின்றனர். ஒவ்வொரு காளை அவிழ்த்து விடும்போதும் 2 சக்கர வாகனம், தங்க காசு, வெள்ளி காசு, ரொக்க பணம், குக்கர், வேட்டி, அண்டா போன்ற பாத்திரங்கள் உள்ளிட்ட பரிசு பொருட்கள் அளிக்கப்படுகின்றன.

ஒரு மணி நேரத்திற்கு ஒரு சுற்றாக போட்டி நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு சுற்றிலும் சிறந்த



மாடுபிடி வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் இறுதி சுற்றில் பங்கேற்க தயாராகி வருகின்றனர். தற்போதுவரை 9 சுற்றுகள் நிறைவடைந்துள்ளன. 10வது சுற்று தொடங்கி நடைபெற்று வருகிறது.

9வது சுற்று முடிவுவில் களம் கண்ட காளைகள் 67 அதில் பிடிபட்ட காளைகள் 16. ஒன்பதாவது சுற்று முடிவில் மாடுபிடி வீரர்கள் 18 பேர், மாட்டின் உரிமையாளர்கள் 17 பேர், பார்வையாளர்கள் 6 பேர் என 41 பேர் காயமடைந்தனர். மேலும், 9 பேர் மேல்சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அதில் மதுரை விளாங்குடியை சேர்ந்த நவீன்குமார் என்பவர் சிகிச்சைபலனின்றி உயிரிழந்தார். 9வது சுற்று முடிவில் 3 வீரர்கள் இறுதி சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டனர். இதன்படி காடுப்பட்டி அசோக்குமார்( 4 காளைகள்), பரளி பாரதிராஜா (2 காளைகள்), எழுமலை நிதிஷ்குமார்( 2 காளைகள்) ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

# கிருஷ்ணகிரி: அரசு பஸ் மோதி விபத்து: 3 பேர் பலி

கிருஷ்ணகிரி, ஜன.16

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே இன்று மாலை அரசு பஸ் மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். துக்க நிகழ்வுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிகொண்டிருந்தவர்கள் மீது அரசு பஸ் மோதியது. இந்த விபத்தில் சரத்குமார், ஹரிஷ், நாகன் ஆகிய 3 பேர் சம்பவ இடத்திலேயே உடல்நசுங்கி உயிரிழந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார் 3 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 'கவர்னருக்குரிய மாண்பு, மரியாதையை இழந்து ஆர்.என்.ரவி சண்டை போடுகிறார்': அமைச்சர் துரைமுருகன்

சென்னை, ஜன.16

தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சென்னையில் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி குறித்து அவர் பேசியதாவது; "கவர்னர் தனக்குரிய மாண்பையும், மரியாதையையும் இழந்துவிட்டு முச்சந்தியில் சண்டையிடுவது போல், ஆட்சியோடு சண்டைபோட்டுக்கொண்டிருக்கிறார். இதனால் எங்களுக்கு எந்த நஷ்டமும் இல்லை. கவர்னர் ஒரு அரசியல்வாதியாக செயல்படுவதை குறைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்." இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

# கோவளம் ஹெலிகாப்டர் சுற்றுலா திட்டத்திற்கு தடை: அன்புமணி

சென்னை, ஜன.16

சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு கோவளம் ஹெலிகாப்டர் சுற்றுலா திட்டத்திற்கு தடை விதிக்கப்பட்டது வரவேற்கத்தக்கது என பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"சென்னை கிழக்குக் கடற்கரை சாலையில் கோவளத்தை மையமாக வைத்து நடத்தப்பட்டு வந்த தனியார் நிறுவனத்தின் ஹெலிகாப்டர் சுற்றுலா சேவைக்கு செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் தடை விதித்திருக்கிறார். சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்கது.

கோவளம் ஹெலிகாப்டர் சுற்றுலா திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கடந்த ஓராண்டுக்கும் மேலாக வலியுறுத்தி வருகிறேன். இது தொடர்பாக கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் நாள் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை செயலாளருக்கும் செங்கல்பட்டு மாவட்ட கலெக்டருக்கு நான் கடிதம் எழுதினேன், அதைத் தொடர்ந்து சில மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹெலிகாப்டர் சுற்றுலா சேவை கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மீண்டும் தொடங்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து ஹெலிகாப்டர் சுற்றுலாவால் சுற்றுச்சூழல், கிழக்குக் கடற்கரைச் சாலையின் பல்வேறு பகுதிகளுக்கு வலசை வரும் பறவைகள் ஆகியவற்றுக்கு ஏற்படும் பாதிப்புகள், சுற்றுலா பயணிகளுக்கு பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் ஆகியவற்றை சுட்டிக்காட்டி ஹெலிகாப்டர் சுற்றுலா திட்டத்திற்கு தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த செப்டம்பர் 14ஆம் தேதி அறிக்கை வெளியிட்டிருந்தேன்.

அதன் பயனாகவே சுற்றுலா பயணிகளுக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்பிருப்பதை காரணம் காட்டி ஹெலிகாப்டர்சுற்றுலாவை தடை செய்துள்ள செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர், அதன் கோவளம் அலுவலகத்திற்கு தடை விதித்திருக்கிறார். அந்த வகையில் இது பாட்டாளி மக்கள் கட்சிக்கு கிடைத்த வெற்றி ஆகும். ஆனால்,



இது போதுமானதல்ல. கிழக்குக் கடற்கடைச் சாலையில் ஹெலிகாப்டர் சுற்றுலா என்ற தத்துவத்திற்கே முடிவு கட்டினால் தான் சுற்றுச்சூழலையும், பறவைகளையும் பாதுகாக்க முடியும்.

இயற்கையின் கொடையாக, உலகப்புகழ் பெற்ற வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு இணையாக கோவளத்திற்கு அருகில் உள்ள பள்ளிக்கரணை சதுப்புநிலம், பெரும்பாக்கம் சதுப்புநிலம், சிறுதாவூர் ஏரி, நன்மங்கலம் காப்புக் காடு ஆகிய பகுதிகளும் அதிக எண்ணிக்கையில் பறவைகள் வலசை வரும் பகுதி ஆகும். இயற்கையாக நமக்கு கிடைத்த இந்த வரத்தை நாம் பாதுகாக்க வேண்டும்.


ஆனால், ஹெலிகாப்டர் சுற்றுலா திட்டம் இந்த வரத்தை சிதைத்துக் கொண்டிருக்கிறது. ஹெலிகாப்டர் சுற்றுலாவிற்கு இப்போது தடை விதிக்கப்பட்டிருந்தாலும் கூட, எதிர்காலத்தில் இதே நிறுவனத்திற்கோ அல்லது வேறு நிறுவனத்திற்கோ ஹெலிகாப்டர் சுற்றுலா நடத்த அனுமதி அளிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அந்த வாய்ப்புகள் அகற்றப்பட வேண்டும்.

கோவளம் பகுதியில் ஹெலிகாப்டர் சேவை செயல்படுத்தப்படுவதால், கிழக்குக் கடற்கரை சாலையில் சுற்றுலா எந்த அளவுக்குவளர்ச்சியடையுமோ, அதை விட அதிக சுற்றுலா வளர்ச்சியை, அப்பகுதியை பாதுகாக்கப்பட்ட பறவைகள் வாழிடமாக அறிவிப்பதன் மூலம் எட்ட முடியும்.

இதைக் கருத்தில் கொண்டு கோவளம் பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் ஹெலிகாப்டர் சுற்றுலா திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியை தமிழக அரசு உடனடியாக ரத்து செய்ய வேண்டும். அத்துடன் கிழக்குக் கடற்கரை சாலையை பாதுகாக்கப்பட்ட பறவைகள் வாழிடமாக அறிவிக்க வேண்டும்."

இவ்வாறு அன்புமணி ராமதாஸ்தெரிவித்துள்ளார்.

# 'லைலா' வைரலாகும் விஷ்வக் சென்னின் பர்ஸ்ட் லுக் போஸ்டர்




தெலுங்கு சினிமாவில் மிகவும் பிரபலமான இளம் நட்சத்திரங்களில் ஒருவர் விஷ்வக் சென். வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடித்து ரசிகர்களால் பாராட்டப்படும் இவரது நடிப்பில் , கடந்த ஆண்டு கேங்க்ஸ் ஆப் கோதாவரி, ஹாமி மற்றும் மெக்கானிக் ராக்கி ஆகிய படங்கள் வெளியாகி இருந்தன.

தற்போது இவர் லைலா என்ற படத்தில் நடித்து வருகிறார். கதாநாயகியாக அகன்ஷா ஷர்மா நடித்துள்ளார். முன்பு கூறியதுபோல வித்தியாசமான கதாபாத்திரத்தில் நடிப்பதற்கு பேர்போன விஷ்வக் சென் இப்படத்தில் ஆண், பெண் என இரண்டு கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். சமீபத்தில் இவர் நடித்த ஆண் கதாபாத்திரத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி இருந்தநிலையில் தற்போது பெண் கதாபாத்திரத்திற்கான பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி உள்ளது.

ராம் நாராயண் இயக்கும் இப்படத்தை ஷைன் ஸ்கிரீன்ஸ் பேனரின் கீழ் சாஹு கரபதி தயாரிக்கிறார். அடுத்த மாதம் 14ம் தேதி இப்படம் வெளியாக உள்ளநிலையில், வரும் 17ம் தேதி இதன் டீசர் வெளியாக உள்ளது.

# மீண்டும் இணைந்த 'பேபி' கூட்டணி



கடந்த 2023 ம் ஆண்டு வெளியாகி மிகப்பெரிய வரவேற்பை பெற்ற படங்களில் ஒன்று பேபி. விஜய் தேவரகொண்டாவின் சகோதரர் ஆனந்த் தேவரகொண்டா கதாநாயகனாக நடித்திருந்த இப்படத்தில் வைஷ்ணவி சைதன்யா கதாநாயகியாக நடித்திருந்தார். எஸ்கேஎன் தயாரிப்பில் சாய் ராஜேஷ் இயக்கிய இப்படம் சமீபத்தில் நடைபெற்ற பிலிம்பேர் சவுத் 2024 விருதுகளில் எட்டு விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டு 5 விருதுகளை அள்ளியது.

இந்நிலையில், இவர்கள் இருவரும் மீண்டும் ஒரு படத்தில் நடிக்க உள்ளதாக அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. துல்கர் சல்மானின் லக்கி பாஸ்கர் மற்றும் சமீபத்தில் வெளியாகி வெற்றி நடைபோட்டு வரும் பாலகிருஷ்ணாவின் டாகு மகாராஜ் ஆகிய படங்களை தொடர்ந்து, இப்படத்தை சித்தாரா எண்டெர்டெயின்மெண்ட் தயாரிக்கிறது.

மேலும், #90ஸ் என்ற வெப் தொடரை இயக்கி பிரபலமான ஆதித்யா ஹாசன் இயக்கும் இப்படத்திற்கு அஹேஷாம் அப்துல் வஹாப் இசையமைக்கிறார். பேபி படத்தின் மூலம் பார்வையாளர்களை கவர்ந்த ஆனந்த் தேவரகொண்டாவைஷ்ணவி சைதன்யா மீண்டும் இணைந்திருப்பது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை கொடுத்துள்ளது.



# தெலுங்கில் அறிமுகமாகும் விக்ரம் பிரபு

கடந்த 2012ம் ஆண்டு பிரபு சாலமனின் இயக்கத்தில் வெளியான கும்கி திரைப்படம் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமானவர் விக்ரம் பிரபு . அந்த படம் பெரும் வரவேற்பை பெற்றது. அதனைத்தொடர்ந்து, இவர் நடித்த படங்கள் அவருக்கு பெரியளவில் கை கொடுக்கவில்லை.

கடந்த 2022ம் ஆண்டு அவரது நடிப்பில் வெளியான டாணாக்காரன் திரைப்படத்தை நடிகரும்இயக்குநருமானதமிழ்இயக்கியிருந்தார். நேரடியாக ஓ.டி.டியில் வெளியான இப்படம் விக்ரம்பிரபுவிற்கு "கம்பேக்" ஆகவே அமைந்தது. கடைசியாக 2023ம் ஆண்டு யுவராஜ் தயாளன் இயக்கிய இறுகப்பற்று திரைப்படத்தில் விக்ரம் பிரபு நடித்திருந்தார்.

இந்நிலையில், இயக்குனர் கிரிஷ் இயக்கத்தில் அனுஷ்கா ஷெட்டி நடித்து வரும் 'காதி 'படத்தில் விக்ரம் பிரபு நடிக்கிறார். இதன் மூலம் அவர் தெலுங்கில் அறிமுகமாக உள்ளார். இன்று அவரது பிறந்தநாளை முன்னிட்டு 'காதி ' படக்குழு சிறப்பு போஸ்டர் வெளியிட்டு வாழ்த்து தெரிவித்துள்ளது.

# திருப்பதி கோவிலில் முட்டிப்போட்டு படியேறி வழிபாடு செய்த நிதிஷ் குமார் ரெட்டி வீடியோ




ஐ.பி.எல் தொடர் மூலம் அறிமுகமாகி இந்திய அணியில் வாய்ப்பு கிடைத்து அதில் சாதித்து காட்டியவர் நிதிஷ் குமார் ரெட்டி. வெறும் 21 வயதான நிதிஷ்குமார் ரெட்டி இந்திய அணிக்காக மூன்று டி20 போட்டிகளில் விளையாடி அதில் அதிகபட்சமாக 74 ரன்கள் அடித்திருக்கிறார். இதேபோன்று சமீபத்தில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான பார்டர் கவாஸ்கர் தொடரில் இந்திய அணியின் ஆல்ரவுண்டராக 5 போட்டிகளிலும் நிதிஷ் குமார் ரெட்டி பங்கேற்றார்.

இதில் பேட்டிங்கில் அவர் மொத்தமாக 298 ரன்கள் குவித்தார். இதில் மெல்போர்ன் டெஸ்ட் போட்டியில் 114 ரன்கள் அடித்து அசத்தினார். இதேபோன்று இந்த தொடரில் பந்து வீச்சில் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்த பார்டர்கவாஸ்கர்தொடரில்அதிகரன்கள்அடித்தஇரண்டாவது இந்திய வீரர் என்ற பெருமையும் அவருக்கு கிடைத்தது.

இந்த நிலையில் தனது வாழ்க்கையே மாறிய நிலையில் திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நிதிஷ் குமார் ரெட்டி முட்டி போட்டு படியில் ஏறி சுவாமி தரிசனம் செய்து கொண்ட நிகழ்வு ரசிகர்களை நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கிரிக்கெட் வீரர் ஒருவர் கடின நேர்த்திக்கடனை செலுத்தியதை பார்த்து அங்கிருந்த ரசிகர்கள் கோவிந்தா...கோவிந்தா என்று முழக்கமிட்டனர். நிதிஷ் குமார் ஆட்டத்தின் மூலம் அவர் சாம்பியன்ஸ் கோப்பை தொடரில் இடம் பெற வேண்டும் என்று ரசிகர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.



# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்: போபண்ணா ஜோடி முதல் சுற்றோடு வெளியேற்றம்

'கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்னில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் ரோகன் போபண்ணா, கொலம்பியாவைச் சேர்ந்த நிக்கோலஸ் பேரியன்டஸ் ஜோடி, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த மார்ட்டினஸ் ஜாம் முனார் ஜோடியை எதிர்கொண்டது.

இதில் போபண்ணா ஜோடி 5-7, 6-7 (5-7) என்ற செட் கணக்கில் ஸ்பெயினின் மார்ட்டினஸ் ஜாம் முனார் ஜோடியிடம் தோல்வி கண்டு முதல் சுற்றோடு தொடரில் இருந்து வெளியேறியது.

# எஸ்.ஏ.20 ஓவர் லீக்: டர்பன் சூப்பர் ஜெயண்ட்ஸை வீழ்த்திய ஜோபர்க் சூப்பர் கிங்ஸ்




ஐ.பி.எல். கிரிக்கெட் பாணியில் தென் ஆப்பிரிக்காவில் 20 ஓவர் லீக் (எஸ்.ஏ.20 ஓவர் லீக்) கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் மொத்தம் 6 அணிகள் கலந்து கொண்டு விளையாடுகின்றன. இதன் 3வது சீசன் கடந்த 9ம் தேதி தொடங்கியது. இந்நிலையில், இந்த தொடரில் இன்று நடைபெற்ற ஒரு லீக் ஆட்டத்தில் ஜோபர்க் சூப்பர் கிங்ஸ் டர்பன் சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த ஜோபர்க் அணி 7 விக்கெட்டுகளை இழந்து 169 ரன்கள் எடுத்தது. ஜோபர்க் தரப்பில் அதிகபட்சமாக லியூஸ் டு ப்ளூய் 38 ரன்கள் எடுத்தார். டர்பன் அணி தரப்பில் சுப்ரயென், கிறிஸ் வோக்ஸ், மஹராஜ் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

தொடர்ந்து 170 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய டர்பன் சூப்பர் ஜெயண்ட்ஸ் அணியினர், சூப்பர் கிங்ஸ் வீரர்களின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தனர். இறுதியில் டர்பன் அணி 18 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 141 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் 28 ரன் வித்தியாசத்தில் ஜோபர்க் அணி வெற்றி பெற்றது.

டர்பன் சூப்பர் ஜெயண்ட்ஸ் தரப்பில் அதிகபட்சமாக டிகாக் 55 ரன்னும், க்ளாசென் 29 ரன்னும் எடுத்தனர். ஜோபர்க் சூப்பர் கிங்ஸ் தரப்பில் ஜெரால்டு கோட்ஸி, டொனோவன் பெர்ரேரியா, தப்ரைஸ் ஷம்ஸி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.